

மாநிலம் முன்னேறிட, தமிழர்கள் வாழ்வு செழிக்க, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியே நீடிக்க வேண்டுமென உணர்ந்து, கரூர் மாவட்டக் கழகச் செயலாளர், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி முன்னிலையில், அ.தி.மு.க.வைச் சேர்ந்த கரூர் மாவட்ட இலக்கிய அணிச் செயலாளர் கமலக்கண்ணன், கரூர் தெற்கு நகர மகளிர் அணி இணைச் செயலாளர் ஜோதி ஆகியோர் தலைமையிலும், அ.தி.மு.க. கரூர் தெற்கு நகர மாணவர் அணி துணைச் செயலாளர் பிரவீன், 44வது வார்டு துணைச் செயலாளர் விக்டோரியா உள்ளிட்டோர், ஏமூர் நடுப்பாளையம் கண்ணதாசன், ஏமூர்புதூர் சிவசுப்பிரமணியன் தலைமையிலும், மாற்றுக் கட்சியைச் சேர்ந்த வெங்கடேசன் தலைமையில் 200 பேர், காக்காவாடி இந்திரா காலனி அ.தி.மு.க. கிளைக் செயலாளர். சுப்பிரமணி, பா.ஜ.க. காக்காவாடி ஊராட்சி செயலாளர் தமிழ்ச்செல்வன், பா.ஜ.க. மாவட்ட விளையாட்டு அணி துணைத்தலைவர், புத்தம்பூர் சமத்துபுரம் கார்த்தி தலைமையில், காக்காவடி எம்.தினேஷ், எம்.கே.கணேஷ் மூர்த்தி, மலைக்கோவிலூர் அருள் ஆகியோரின் ஏற்பாட்டில், 200க்கும் அதிகமான அ.தி.மு.க.வினர் மற்றும் பா.ஜ.க.வினர் செங்காட்டானூர் அ.தி.மு.க. கிளைச் செயலாளர் கருப்பண்ணன், செல்லரபாளையம் பொன்னுசாமி, சக்தி நகர் கிளைச் செயலாளர் தர்மராஜ், ஏ.டி.காலனி, குமார், லோகநாதன், அ.தி.மு.க. கரூர் மாவட்ட வர்த்தக அணி துணைச் செயலாளர் ஜெகதீஷ் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்.

### மாணவப் பருவத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு

# கொள்கை மறவராக வாழ்ந்தவர் இரா.மோகன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, டிச. 11-**

**"மாணவப் பருவத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு கொள்கை மறவராக வாழ்ந்தவர் இரா.மோகன் அவர்கள்" என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

கோவை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.மோகன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்த முற்றேன். அவரது மறைவிற்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவப் பருவத்திலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட அவர், தன்னுடைய 13 வயதிலேயே நகர்மன்றத் தேர்தலில் கையில் இருவண்ணக் கொடியேந்தி, கழக வேட்பாளர்களுக்காக வீதிவீதியாக வாக்குச் சேகரித்தவர். இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தில் பங்கெடுத்தவர். எமர்ஜென்சிக் காலத்தில் சிறைவாசம் அனுபவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது பேரன்பிற்குப் பாத்திரமான அவர், 1980ஆம் ஆண்டு கோவை நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினராகவும், 1989ஆம் ஆண்டில் சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகவும் பணியாற்றி, தன்னுடைய தொண்டால் பொதுமக்களின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றார்.

கொள்கை மறவராக வாழ்ந்த இரா. மோகன் அவர்களுக்கு, கடந்த 15.9.2022 அன்று நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழாவில், "அண்ணா விருது" வழங்கி, அவரது பொதுவாழ்வைப் போற்றினேன். நான் எப்போது கோவைக்குச் சென்றாலும், இரா.மோகன் அவர்களைச் சந்திக்கத் தவறியதில்லை. இன்று அவர் மறைந்த வேதனை மிகுந்த செய்தியால் கலங்கி நிற்கிறேன்.

இரா. மோகன் அவர்களது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், கழகத் தோழர்கள், கோவை மக்கள் என அனைவருக்கும் என்னுடைய ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### முதல்வர் பொறுப்பேற்றுக்கொண்ட இந்த மூன்றரை ஆண்டுகளில்

# நகராட்சிக்குத் தேவையான அளவு நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது!

## சட்டப்பேரவையில் உறுப்பினர் கேள்விக்கு அமைச்சர் கே.என்.நேரு பதில்!



**சென்னை, டிச. 11 -**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது அறந்தாங்கி உறுப்பினர் தி.ராமச்சந்திரன் கேள்விக்கு அமைச்சர் கே.என்.நேரு பதிலளிக்கையில் முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட இந்த மூன்றரை ஆண்டுகளில் எந்த நகராட்சிக்கும் குறைவு இல்லாமல் ஒவ்வொரு நகராட்சிக்கும் நிதியை ஒதுக்கித் தந்து பணிகள் நடைபெற்று வருகின்றது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு: -

**தி.ராமச்சந்திரன்:** அறந்தாங்கி, அவுலியா நகர் 1 ஆம் வீதியில் உள்ள பாலத்தைச் சீரமைக்கவும், கழிவுநீர் கால்வாய் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் கே.என். நேரு:** திருத்திய விடையை தருவதற்கு அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொண்டு, விடை (அ) மற்றும் (ஆ), அறந்தாங்கி வார்டு எண் 22, அவுலியா நகர் 1 ஆம் வீதியில் பழுதடைந்த பாலம் அகற்றப்பட்டு, புதிய கான்கிரீட் பாலம் மற்றும் 34 மீட்டர் நீளமுள்ள மழைநீர் வடிகால் பணி 2¼ இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**தி. ராமச்சந்திரன்:** ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைந்து சென்று உரிய பாதுகாப்பும், நிவாரணப் பணிகளும் சிறப்பாக மேற்கொண்ட முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அதிகாரிகள், ஊழியர்கள் அனைவருக்கும் என் சார்பிலும், காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் பாராட்டுகளும், நன்றியையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. எனது அறந்தாங்கி நகராட்சி வார்டு 22, அவுலியா நகர் பகுதி உட்பட அறந்தாங்கி நகராட்சியில் உள்ள 27 வார்டுகளுக்கும் கூடுதலாக ஒரு சிறப்பு நிதி ஒதுக்கி மழைநீர் வடிகால் (storm water drain) மற்றும் கழிவுநீர் வடிகால் மற்றும் சாலைகளை மேம்படுத்தித்தர அரசு முன்வருமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட இந்த $3\frac{1}{2}$ ஆண்டு காலத்தில் எந்த நகராட்சிக்கும் குறைவு இல்லாமல், ஒவ்வொரு நகராட்சிக்கும் நிதியை ஒதுக்கித்தந்து பணிகள் நடைபெற்று வருகின்றது. நம்முடைய அறந்தாங்கி நகராட்சிக்கு, கடந்த $3\frac{1}{2}$ வருடங்களில் அரசின்மூலமாக சாலைப் பணிகளுக்கு ரூபாய் 15 கோடி, வடிகால் பணிகளுக்கு ரூபாய் 43 இலட்சம், வாகனங்கள் வாங்குவதற்கு ரூபாய் 90 இலட்சம், தெரு விளக்கு பணிகளுக்கு ரூபாய் 60 இலட்சம், குடிநீர் அபிவிருத்தி பணிகளுக்கு ரூபாய் 31 கோடி, குளங்கள் மேம்பாட்டிற்காக ரூபாய் 5 கோடி, பூங்காக்கள் அமைக்க ரூபாய் 21 இலட்சம், திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ரூபாய் 12 இலட்சம், முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி திட்டத்திற்கு சமையல் கூடம் அமைக்கும் பணிக்கு ரூபாய் 25 இலட்சம், slaughter house பராமரிப்பு பணிக்கு ரூபாய் 10 இலட்சம், பள்ளிக்கட்டடப் பராமரிப்பு பணிக்கு ரூபாய் 69 இலட்சம் மற்றும் ஏனைய இதரப்பணிகளுக்கு ரூபாய் 35 இலட்சம் என ஆக மொத்தம் 66 கோடி ரூபாய் அறந்தாங்கி நகராட்சிக்காக, இந்த $3\frac{1}{2}$ ஆண்டுகளில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. உறுப்பினர் இன்னும் எந்தப் பணி முடியாமல் இருக்கிறது என்று சொன்னால், அதையும் முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று நிதிநிலைமைக்கேற்ப சீரமைத்துத்தரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**தி.ராமச்சந்திரன்:** அமைச்சர் அவர்களின் பதிலுக்கு மீண்டும் நன்றி. அறந்தாங்கி தொகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நமது அரசு அறிவித்தும், நகராட்சிக்கு சொந்தமாக போதிய இடம் இல்லாத காரணத்தினால், தஞ்சாவூர் சத்திரத்திற்கு சொந்தமான, இப்போது சந்தை நடைபெறுகின்ற இடத்தை, ஏற்கெனவே கேட்டிருந்தேன் அதை இரண்டாக பிரித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் ஏற்கெனவே இயங்கிகொண்டிருக்கும் பேருந்து நிலையத்தை புதிய இடத்திற்கு விரிவுப்படுத்தி, நவீன வசதியுடன்கூடிய ஒரு பேருந்து நிலையமும், மறு பகுதியில் ஒரு சீர்செய்த சந்தையும் விரைந்து அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை தங்கள் வாயிலாக கேட்டு, நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி வணக்கம்.

**அமைச்சர் கே.என். நேரு:** உறுப்பினர் அவர்கள் சொன்னதை நான் கவனமாக கேட்டேன். இப்போது, நிலம் கையகப்படுத்துவது என்று சொன்னால், அதற்கு மிகப்பெரிய பொருள் செலவு ஏற்படுகிறது. அது பேருந்து நிலையத்திற்கோ அல்லது சந்தைக்கோ கட்டவேண்டிய பொருள்செலவைக்காட்டிலும், நிலம் கையகப்படுத்துவதிலே பெரிய செலவு ஏற்படுகிறது. அதனால்தான் முதலமைச்சர் அவர்கள் நகராட்சியைச் சுற்றி எந்தெந்தப்பகுதிகள் ஜனத்தொகை அதிகமாக இருக்கின்ற கிராம ஊராட்சிகளை நகராட்சியுடன் இணைப்பதற்கான ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு பரிசீலித்து வருகிறது. அப்படி இணைக்கின்ற பட்சத்தில் அருகில் இருக்கின்ற அந்த இடத்தை தேர்வு செய்து பேருந்து நிலையம், சந்தைகள் போன்ற நகராட்சிக்கு வருவாய் வருகின்ற அந்தப் பணி நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்தக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா முத்தியால்பேட்டை தொகுதி தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகளை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வழங்கினார்.



தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப்புளிக்காடு ஊராட்சியில் ரூ.42 லட்சம் மதிப்பில் ஆழ்துளை கிணறு மற்றும் தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியத்தின் சார்பில் உலர்க்களம் மற்றும் தரம் பிரிப்பு கூடம் அமைக்கும் பணியை ஊராட்சி மன்றத் தலைவர் பண்ணவயல் சு. பாஸ்கர்,ஒன்றிய பிரதிநிதி,ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வீர.சரவணன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.உடன் உறுப்பினர்கள்,கிராம மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



திருவாரூர் மாவட்டத்தின் ஆரம்பகால மாவட்டச் செயலாளராக இருந்து மறைந்த கழக செயல்மறவர் கோட்டூர் அ.இராசசேகரன் அவர்களின் 12 வது நினைவு தினத்தில் கோட்டூரில் ஒன்றியச் செயலாளர் பால.ஞானவேல் தலைமையில் கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்று மலரஞ்சலி செலுத்தினர்.

### நினைவில் வாழும் முன்னாள் மாவட்டச் செயலாளர்

# கோட்டூர் அ.இராசசேகரன் 12 வது நினைவு தினம்!

## ஒன்றியச் செயலாளர் பால.ஞானவேல் தலைமையில் கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், டிச. 11 -

திருவாரூர் மாவட்டத்தின் ஆரம்பகால மாவட்ட செயலாளராக இருந்து நினைவில் வாழும் கோட்டூர் அ.இராசசேகரன் அவர்களின் 12 வது நினைவு தினத்தில் கோட்டூரில் ஒன்றிய செயலாளர் பால.ஞானவேல் தலைமையில் கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்று மலரஞ்சலி செலுத்தினர்.

கோட்டூர் உள்ளிட்ட பல பகுதிகளிலும் அப்போது கழக கொடி ஏற்றுவதற்கு பல்வேறு தடைகள் இருந்தும், அவைகளை தகர்த்து பட்டிதொட்டி எங்கும் கழக கொடி ஏற்றி, கிளைகள் அமைத்து, கழகம் வளர்த்து, மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் அன்பிற்கு பாத்திரமானவரும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட திருவாரூர் மாவட்டத்தின் முதல் மாவட்ட செயலாளரும், "இமை கொட்டாமல் இயக்கத்தை வளர்த்த என் இளைய தம்பிகளில் ஒருவர் தங்கமாக விளங்கிய அன்பு தம்பி"என கலைஞர் அவர்களால் பாரட்டப்பட்டவருமான கோட்டூர் அ.இராசசேகரன் அவர்களின் 12 வது நினைவு நாள் நேற்று முன் தினம் (09.12.2024) அவரது சொந்த ஊரான கோட்டூரில் அனுசரிக்கப்பட்டது.

கோட்டூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பால.ஞானவேல் தலைமையில் நடைபெற்ற நினைவு தின நிகழ்வில் அ.இராசசேகரன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் மலர் தூவி, மலர் மாலை அணிவித்து மௌன அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வில் அவைத் தலைவர் ராயர் பெர்னாண்டோ, துணை செயலளர்கள் மதியழகன், சிவகுமார், பொருளாளர் நித்யானந்தம், மாவட்டப் பிரதிநிதிகள் யுவராஜ், தமிழ்செல்வம், மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவர் அமுதா, ஊராட்சி மன்ற தலைவர்கள் முருகையயன், ஆனந்த், நேதாஜி, ரேணுகா வெங்கடாசலம் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.



திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் அரக்கரை நடுநிலைப்பள்ளி மாணவ – மாணவிகளுக்கு இணையத்தை பாதுகாப்பாக பயன்படுத்துவது குறித்து தொகுதி பொறுப்பாளர் ராகோ.உதயசூரியன் ஏற்பாட்டில் விழிப்புணர்வு வகுப்பு நடைபெற்றது. உடன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பா.அரவிந்த் மற்றும் தினேஷ், இளவரசன், சீனி குமார் வசந்தி, ரம்யா அர்விந்த் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## காவனூர் மா.தாமோதரன்

### டிசம்பர் 11 (2015)



**பேரறிஞர் அண்ணாவின் பேச்சால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கிளைச் செயலாளர், சித்தாமூர் ஒன்றியச் செயலாளர், மாவட்ட அணிகளின் அமைப்பாளராகப் பணியாற்றியவர்.**

**சூணாம்பேடு ஊராட்சி மன்றத் தலைவராக இரண்டு முறையும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் அன்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த இந்தி எதிர்ப்பு, சட்ட நகல் எரிப்பு, விலைவாசி உயர்வு, இலங்கைத் தமிழர் ஆதரவு உள்ளிட்ட பல போராட்டங்களில் பங்கேற்று ஏறத்தாழ பத்து முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**